**திக்வெல்ல பிரதேச சபை - 2020**

---

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

திக்வெல்ல பிரதேச சபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயற்பாட்டுக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகார சட்டத்தின் உப பிரிவு 172(1) மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையில் உள்ளடக்கிய ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, திக்வெல்ல பிரதேச சபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு கோட்பாடுகளுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை

தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)**

---

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- பிரதேச சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கு அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் பிரதேச சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

### 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விஷேட ஏற்பாடுகள் அடங்கியுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களில் அடங்கியுள்ளன.

### 1.6 நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு சபைக்குச் சொந்தமாக ரூபா 3,567,860 இற்கான பெறுமதி உடைய 12 காணி மற்றும் கட்டடங்களை கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | காணிக்காக காணி உறுதிகள் காணப்படாமையால் கணக்கீடு செய்வதற்கு முடியாமல் போனது எனவும், சட்டரீதியாக உரித்தாக்கப்பட்ட பின்னர் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு உள்ளுராட்சி ஓய்வூதிய பங்களிப்பு நிதியத்திற்கு செலுத்த வேண்டியிருந்த ரூபா 2,463,947 தொகைக்காக கடன் கொடுத்தோர் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | செலுத்த வேண்டிய நிலுவை பங்களிப்புத் தொகை திருத்தித் தரும்படி ஓய்வூதியப் பணிப்பாளரிடம் கோரப்பட்டுள்ளது என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (இ) | சபையினால் பேணப்பட்டு வரும் ரூபா 21,000,000 இற்கான 03 நிலையான வைப்புக்களுக்காக மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ரூபா 175,000 இற்கான பெற வேண்டிய வட்டி வருமானத்தை கணக்கீடு செய்திருக்கவில்லை. | 2021 ஆண்டிற்கான இறுதிக் கணக்குகளின் மூலம் இந்த வழுவினை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (ஈ) | சபைக்கு சொந்தமாக காணப்பட்ட மின் பிறப்பாக்கி ஒன்றின் பெறுமதியினை பெறுமதி மதிப்பீடு செய்து கணக்கீடு செய்திருக்கவில்லை. | பெறுமதியை பெறுமதி மதிப்பீடு செய்து கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | |

### 1.6.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக் கூற்றுக்களில் அடங்கியுள்ள கூட்டுத்தொகை ரூபா 398,768,874 தொகைக்கான 05 கணக்கு விடயங்கள் தொடர்பான மீதிகள் மற்றும் அதனொடு தொடர்புடைய துணைப் பதிவேடு / அட்டவணைகளில் காட்டப்பட்டுள்ள பெறுமதி ரூபா 157,516,883 தொகையாக ரூபா 241,251,991 இற்கான வித்திசயாசம் ஒன்று காணப்பட்டது. | சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | குறிப்பிட்ட மீதிகளின் வித்தியாசங்களை இணக்கம் செய்து கணக்குகளை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.6.3 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்று இன்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தேவையான தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமையால் கூட்டுத்தொகை ரூபா 176,262,787 தொகைக்கான 08 கணக்கு விடயங்கள் தொடர்பாக கணக்காய்வின் போது திருப்திகரமாக பரிசோதனை மேற்கொள்ள முடியாதிருந்தது. | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள கணக்கு மீதிகளை உறுதிப்படுத்தும் சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் படி மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினை மிகைத்த வருமானம் ரூபா

45,159,104 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 21,207,962 தொகையாகும்.

### 2.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ரூபா 734,521 இற்கான நிலுவை வீதவரி மீதியொன்று காணப்பட்டது. | மீதி நிலுவைத் தொகையை விரைவாக அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | நிலுவை வீதவரி வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ரூபா 1,744,350 இற்கான நிலுவை வாடகை மீதி ஒன்று காணப்பட்டது. | காணப்பட்ட நிலுவைகளில் 2021 மே 31 திகதி அளவில் ரூபா 843,325 தொகை அறவீடு செய்யப்பட்டுள்ளதுடன், மீதியான நிலுவைத் தொகையை அறவீடு செய்வதற்கு இறுதி அறிவித்தல் அனுப்பப்பட்டுள்ளதுடன், அதற்கு பதில் அனுப்பாவிடின் அந்த கடைகளை சபைக்கு உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிலுவை வாடகை விரைவாக அறவிடப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் 03 ஆம் பிரிவின் கீழ் பொது மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பகிரங்க பொது வழிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல் பொது மக்களின் சுகபோகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டிய பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

### 3.1 முகாமைத்துவ திறமையின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 1987 இன் 15 இலக்க பிரதேச சபை அதிகார சட்டத்தின் 149 பிரிவின் பிரகாரம் சபையின் அதிகாரப் பிரதேசத்தில் நடாத்தப்பட்டு வரும் 02 ஹோட்டல்களில் இருந்து மீளாய்வாண்டு இறுதி வரை ரூபா 14,640,260 தொகை குறைவாக அறவீடு செய்யப்பட்டிருந்ததுடன், 12 ஹோட்டல்களில் இருந்து கட்டணங்கள் அறவீடு செய்திருக்கவில்லை. | கட்டணம் குறைவாக அறவிடப்பட்டுள்ள ஹோட்டல்களில் இருந்து நிலுவைத் தொகையை அறவீடு செய்வதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என. | அதிகார சட்டத்தின் பிரகாரம் வரி அறவீடு செய்யப்பட வேண்டும். |

### 3.2 செயற்பாட்டுத் திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2020 ஆண்டின் போது கணிப்பீட்டு அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டு | சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்வதற்கு | விரைவாக அனுமதிப்பத்திரம் |

| | | | |
|---|---|---|---|
| | சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ள வேண்டிய 10 நிறுவனங்கள் இனங்கண்டிருந்த போதிலும் அந்த நிறுவனங்களில் இருந்து சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொண்டிருக்கவில்லை. மேலும், அனுமதிப்பத்திரக் கட்டணமாக ரூபா 44,000 தொகை சபை அறவீடு செய்திருக்கவில்லை. | நடவடிக்கை எடுக்கும் படி குறிப்பிட்ட தொழில்சாலைகளுக்கு எழுத்துமூலம் அறிவிக்கப்பட்டது. | வழங்குதல் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | முன்னைய ஆண்டு மற்றும் மீளாய்வாண்டு தொடர்பாக அதிகாரப் பிரதேசத்தில் காட்சிப் படுத்தப்பட்டிருந்த 104 அறிவித்தல் பலகைகளில் இருந்து அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 438,375 தொகையினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பணம் செலுத்தும் படி குறிப்பிட்ட நிறுவனங்களுக்கு ஞாபகப்படுத்தல் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது என. | வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். |

### 3.3 ஒப்பந்த நிருவாகத்தில் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 சபிரி கமக் சமூக அடிப்படை கிராமிய நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் ரூபா 1,481,786 இற்கான மதிப்பீட்டுப் பெறுமதியை உடைய 03 பாதைகள் உரிய கனத்திற்கு நிர்மாண வேலை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | குறிப்பிட்ட 03 பாதைகளில் 02 செயற்திட்டங்கள் தொடர்பாக பில் பத்திரங்களுக்கான பணம் இது வரை குறிப்பிட்ட ஒப்பந்தக்காரர் சங்கங்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை என. | நிர்மாண வேலைகள் உரிய நியமத்தில் மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 4 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 சுற்றாடல் சிக்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையின் அதிகாரப் பிரதேசத்தின் மாதாந்தம் சேகரமாகும் உக்கக்கூடிய குப்பைகளின் எண்ணிக்கை 45 தொன்கள் மாத்திரம் காணப்பட்டதுடன், சந்தை வளவில் மற்றும் பிரதேச சபை வளவில் காணப்படும் உயிர் வாயு உற்பத்தி இயந்திரங்கள் இரண்டிற்காக 1100 கிலோ கிராம் மாத்திரம் பயன்படுத்தப்படுவதுடன், மீதியான உக்கக் கூடிய குப்பைகளை | பொருத்தமான காணி ஒன்றை உரித்தாக்குவதற்காக கவனம் செலுத்தப்பட்டு வருகின்றது என | முறையான குப்பை முகாமைத்துவ செயற்திட்டமொன்று திட்டமிடப்பட்டு ஆரம்பிக்கப்பட வேண்டும். |

தெமடபிடிய தனியார் காணி ஒன்றில் குவிக்கப்பட்டு காணப்படுகின்றது. குப்பைகளை குவிப்பதற்கான பொருத்தமான நடைமுறை ஒன்று சபையினால் இதுவரை இனங்கண்டிருக்கவில்லை.